செய்தி வெளியீடு எண்: 616 நாள்:25.08.2020

## <u>தமிழ் வளர்ச்சித் துறை</u>

## <u>செய்தி வெளியீடு</u>

### திரு.வி. கலியாணசுந்தரனார் அவர்களின் 137வது பிறந்த நாள் 26.08.2020 திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தல்

தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் (திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார்) தற்போதுள்ள சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், துண்டலம் கிராமத்தில் 26.08.1883 அன்று பிறந்தார். இவர் சென்னையில் இராயப்பேட்டையில் வெசுலிப் பள்ளியில் ஆறாம் வகுப்பு வரை படித்தவர். வெசுலி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் நா.கதிரைவேற்பிள்ளை மற்றும் மயிலை தணிகாசல முதலியாரிடம் தமிழ்க்கல்வி கற்றவர். பின்னர் இராயப்பேட்டை வெசுலியன் பள்ளியிலும், கல்லூரியிலும் ஆசிரியராக பணிபுரிந்தவர்.

திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளர். இவர், மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, வாழ்க்கைத் துணை, உள்ளொளி, உரை நூல்கள், பெரிய புராணம் குறிப்புரையும் – வசனமும், முருகன் அல்லது அழகு, இலங்கைச் செலவு (பயணநூல்) போன்ற அரசியல், சமுதாயம், சமயம் சார்ந்த பல நூல்களையும், பாடல்களையும் எழுதியுள்ளார். இவரது படைப்பிலக்கியங்களில் இவரால் கையாளப்பட்ட தமிழ்நடையின் காரணமாக இவர் ‘தமிழ்த்தென்றல்’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். இவர் தேசபக்தன், திராவிடன், நவசக்தி போன்ற நாளிதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றி நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றியவர். தமிழ்நாட்டில் தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டவர். ‘தோழர்’ எனும் சொல்லை தொழிலாளர்களிடத்தில் அறிமுகப்படுத்தியவர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த 'தமிழ்த்தென்றல்' திரு.வி. கலியாணசுந்தரனார் அவர்களின் புகழைப் போற்றும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரவாயல் வட்டத்தில் அவர் பிறந்த ஊரான துண்டலம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு அவருடைய பிறந்த நாளான 26.08.2020 புதன் கிழமை காலை 10.00 மணிக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து, அவர்தம் திருவுருவப் படத்திற்கு மலர்தூவிச் சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**